**மார்ச் - 22**

**"நம்மை நாமே நிதானித்து அறிந்தால், நாம் நியாயந்தீர்க்கப்படோம். நாம் நியாயந்தீர்க்கப்படும் போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தாலே சிட்சிக்கப்டுகிறோம்"**

- 1கொரி 11 : 31, 32

கிறிஸ்தவர்களாக லாபங்களையும், நஷ்டங்களையும் இவைகள் நாம் உலகத்தோடும் மாம்சத்தோடும், பிசாசோடும் செய்கிற இடையறாத போரில் எப்படி, எப்பொழுது, எங்கே நமக்கு வந்தன என்பவைகளையும் தெரிந்துக் கொள்ளுதல், கர்த்தரைப் பிரியப்படுத்த வேண்டும் என்கிற ஒரே நோக்கத்தோடு இவ்விதமாக எண்ணுகிற எல்லாரும் நிச்சயமாக பலனடைவார்கள். ஆவிக்குரிய இஸ்ரவேலர், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணியும் பிரதான ஆசாரியனுக்கு சமீபமான ஜீவியத்தை ஜீவிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். நமது கர்த்தரின் நீதி சாட்டப்பட்ட வஸ்திரம் அழுக்காகிப் போகாமலும், ஆனால் மிகச்சிறிய அழுக்கும் நீக்கப்பட்டு "கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல்" அதை நாம் வைத்திருக்கத்தக்கதாகவும், மனசாட்சியின் மிகச் சொற்ப அசுசியையும் சுத்தம் செய்வதற்காக பிரிய ரட்சகரின் இரத்தத்திற்காகத் தொடர்ந்து கெஞ்சிக் கேட்க வேண்டும்.

-Z ’03, 3, 4(R 3125).

“தன்னையே நிதானித்து அறிதல்” என்பது தேவனுடைய அன்பில் தன்னை வைத்துக்கொண்டிருக்கும்படியாக ஒருவன் தன்னுடைய நடத்தையை கண்காணிப்பதையும், நுட்பமாய் பிழை பார்த்தலையும், கட்டுப்படுத்தலையும் குறிக்கிறது. இவ்விதமாக செய்கிறவர்கள் உண்மையான கிறிஸ்தவர்கள். இவர்களுக்கு அடிக்கடி சிட்சையின் சவுக்கினால் தூண்டப்பட்டு நடத்தப்பட வேண்டியதில்லை. என்றாலும், இவ்விதமான செய்கையில் அஜாக்கிரதையாக இருந்தால், கர்த்தர் நம்மை சீர்திருத்த நாடுகையில், நம்மை துஷ்டராகிவிடாமல் தடுக்கவும், நாம் சீர்திருத்தத்தைப் பெறவும் சிட்சையின் கோலை உபயோகிக்கிறார்.

- P ’34, 31.

**ஒத்த வாக்கியங்கள் :-**

யோபு 12:23; சங் 4:4; 19:12; 26:2; 77:6; 119:59; 139:23,24; எரே 17:9; புல 3:40; ஆகா 1:7; மத் 26:22; 1கொரி 5:7,8; 11:27-29; 2கொரி 13:5; கலா 6:3; சங் 32:5; 94:12; எபி 12:5-13; 1பேது 2:20; வெளி 2:5,16; 3:2,3,19.

**கோபுர வாசிப்பு :** Z ’14, 247 (R 5519)

**வினாக்கள் :** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வார அனுபங்கள் என்ன? அவற்றை எவ்வாறு சகித்தேன்? அவை எதில் முடிந்தன?